**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண்.116/2019**

PW3 –நாகவள்ளி, க/பெ. சாமிதுரை
நாள்–03.04.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்திருந்தது என்றால் வந்தது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் அரசாலமங்களம் கிராமத்தில் உள்ளது. யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாலசுந்தரம் சுந்தரபாண்டியன் மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நில தகராறு சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து யாருக்கு உரியையானது என்றால் பெருமாளுக்கு உரிமையாக இருந்து அதன் பிறகு கலியமூர்த்தி அடைந்து கலியமூர்த்தி பாலசுந்தரத்திடம் அடகு வைத்துள்ளார்.

தாவா சொத்து சுந்தரபாண்டியன் மற்றும் சாரதம்பாள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1–ல் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை எனது கணவர்தான் கையொப்பம் செய்துள்ளார். எனக்கு கையெழுத்து போட தெரியுமா என்றால் போடத்தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் கையெழுத்து என்பது என்றால் பார்த்து சொல்ல இயலாது என்றால் சரிதான். அதானல் வா.சா. ஆ.1 ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்கு கிரய உடன்படிக்கை

ஏற்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு கிரய உடன்படிக்கை ஏற்படவில்லை என்றால். சரியல்ல. எனது கணவர் எங்கு உள்ளார் என்றால் உடல் நிலை சரியில்லாமல் வீட்டில் இருந்து வருகிறார். எனது கணவருக்கு என்ன பாதிப்பு என்றால் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டதால் மூளை குழம்பி சரியா பேச இயலாம் இருந்து வருகிறார். என்னை எனது கணவர் அடையாளம் கண்டு கொள்ளவார் என்றால் சரிதான்.

என்னிடம் பேசுவாறார் என்றால் பேசுவார். நீதிமன்றத்திற்கு வருவதை அவரிடம் சொல்லிவிட்டுதான் வந்தேன் என்றால் சரிதான்.எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான மருத்துவ சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் நல்ல உடல்நிலையில்தான் இருந்து வருகிறார் என்றும் அவர் ஆஜராகி சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் அவருக்கு உடல்நிலை சரியில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீடு யார் வீட்டிற்கு பக்கதில் உள்ளது என்றால் வாதி வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது.

நான் சொல்வது போல் 28.08.2002-ல் எவ்வித கிரய உடன்படிக்கையும் ஏற்படவில்லை என்றும் கலியமூர்த்தியோ, 1, 2 பிரதிவாதிகளோ கையொப்பம் இடவில்லை என்றாலும் சரியல்ல. வாதியின் எனது பக்கத்து வீட்டுகாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>